மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

தரம் - 09	கத்தோலிக்கத் திருமறை – I,II	நேரம்: 2.00 மணித்தியாலங்கள்

பெயர் / சுட்டெண் .....

பகுதி - I

➢ ***மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.***

1) "என் காலடிக்கு உம் …….. விளக்கு ! என் பாதைக்கு ஒளியும் அதுவே!" இடைவெளிக்கு பொருத்தமான சொல்
   1) ஒளியே 2) வாக்கே 3) அன்பே 4) அருளே

2) பழைய ஏற்பாட்டின் வெளிப்பாட்டு இலக்கியம் என அழைக்கப்படும் நூல்
   1) திருவெளிப்பாடு 2) திருப்பாடல் 3) தானியேல் 4) திருத்தூதர் பணி

3) இஸ்ராயேல் மக்களின் செபப்புத்தகமாகவும், பாமாலையாகவும் அமைந்தது.
   1) திருப்பாடல்கள் 2) திருவிவிலியம் 3) வரலாற்று நூல்கள் 4) ஐந்நூல்

4) நற்செய்திகளிடையே ஒத்ததன்மை காணப்படுவதால் ஒத்தம நற்செய்தி என்று அழைக்கப்படுகின்றது. இவற்றுள் அடங்காத நூல்,
   1) மத்தேயு 2) மாற்கு 3) லூக்கா 4) யோவான்

5) தூய மாற்கு உரோமையில் துன்புறுத்தலுக்கு உள்ளான கிறிஸ்தவர்களைத் திடப்படுத்த தமது நற்செய்தியை எழுதினார். அவ்வாறு துன்புறுத்திய மன்னன்.
   1) தொமீசியன் 2) ஏரோது 3) பிலாத்து 4) நீரோ

6) யேசுக்கிறிஸ்து என்னும் ஆயனின் ஆடுகளாகிய நாம் அவர் வழியாக …….. பெற்றுக் கொள்ள வேண்டும்.
   1) நிலைவாழ்வை 2) இவ்வுலக வாழ்வை 3) குடும்ப வாழ்வை 4) சமூக வாழ்வை

7) நோவா வெள்ளம் வற்றிவிட்டதை அறிய முதலில் அனுப்பியது.
   1) புறா 2) காகம் 3) மைனா 4) கிளி

8) தாவீது அரசன் தவறிழைத்த போது அவனது தவறைச் சாதுரியமாக எடுத்துக்கூறிய இறைவாக்கினர் யார்?
   1) எலியா 2) மீக்கா 3) நாத்தான் 4) எலிசா

9) மனம் திருந்தும் பாவிகள் மன்னிப்புப் பெறுவர் என்பதை விளக்க கூறும் உவமை.
   1) காணாமல் போன மகன் 2) விதைப்பர் உவமை
   3) முத்து 4) வலை

LMDMUnit

10) "அ" "ஆ"

"அ"	"ஆ"
1. உரியாவின் மனைவி	E. சாலமோன்
2. கோலியாத்தை வென்றவர்	F. சாமுவேல்
3. எருசலேம் தேவாலயத்தை கட்டியவர்	G. தாவீது
4. இராமாவில் பலிப்பீடம் கட்டியவர்	H. பத்சேபா

"அ" பகுதியிலுள்ள விடயத்திற்கு "ஆ" பகுதியில் இணைக்கும் போது கிடைக்கும் சரியான ஒழுங்கு முறை,

1) H, G, F, E 2) H, G, E, F 3) H, F, E, G 4) H, F, E, G

11) நம் ஆதிப்பெற்றோர் செய்த பாவத்தினால் நமது பிறப்பிலேயே நமக்கு உரிமையாகும் பாவ இயல்பு,

1) கன்ம பாவம் 2) அற்ப பாவம் 3) ஜென்ம பாவம் 4) சாவான பாவம்

12) மற்றவர்களின் நன்மையைக் குறித்து எரிச்சல் அடைதல் தலையான பாவங்களில் எதுவாக அமைகின்றது.

1) அகங்காரம் 2) பகை 3) பேராசை 4) பொறாமை

13) "அன்பான மகனே எனது வாழ்வில் இருந்த ஒரே ஆசை உன்னைக் கிறிஸ்தவனாகக் காண்பதே" யாரால் , யாருக்கு கூறப்பட்டது.

1) எலிசபேத்தால் - திருமுழுக்கு யோவானுக்கு
2) மரியாளால் யேசுவிற்கு
3) மொனிக்கம்மாவால் அகுஸ்தினாருக்கு
4) மொனிக்கம்மாவால் அம்புறோசியாருக்கு

14) ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறும் போதும் குருவானவர் மன்னிப்பு கொடுக்கும் போதும் நாம் சொல்லும் செபம்,

1) பரலோக மந்திரம் 2) உத்தம மனஸ்தாபம்
3) மூவேளைச் செபம் 4) விசுவாச மந்திரம்

15) நோயில் பூசுதல் அருளடையாளத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியவர்கள்.

1) வயோதிபர்.
2) சத்திரசிகிச்சைக்கு ஆயத்தம் செய்யப்படுபவர்கள்.
3) மரணத்தருவாயில் இருப்பவர்கள்.
4) மேற்கூறிய யாவும் .

16) குருவானவர் நோயில் பூசுதல் அருளடையாளத்தை வழங்கும் போது திரு எண்ணை பூசும் இடங்கள்

1) நோயாளியின் நெற்றியிலும், இரு கைகளிலும்
2) நோயாளியின் நெற்றியிலும், இரு கால்களிலும்
3) நோயாளியின் நெற்றியிலும், தலையிலும்
4) நோயாளியின் நெற்றியிலும், நெஞ்சிலும்

LMDMUnit

17) தலையான பாவங்கள்

1) 06 2) 07 3) 12 4) 09

18) யேசுவைப்போல் தான் இறக்கும் முன் தன்னை கத்தியால் குத்திய அலெக்ஸ்சாண்டருக்கு மன்னிப்பு கொடுத்தவர்.

1) தூய மொனிக்கம்மாள் 2) தூய அன்னைத்திரேசா

3) தூய செசிலியம்மா 4) தூய மரிய கொறற்றி

19) ஆண் பிள்ளைகளினதும், முதல் நன்மை பெறும் பிள்ளைகளினதும் பாதுகாவலர்.

1) தூய மரிய கொறற்றி 2) தூய செசிலியம்மா

3) தூய டொமினிக் சாவியோ 4) தூய அக்னெஸ்

20) பேச முடியாதிருந்த செக்கரியா திருமுழுக்கு யோவானின் பிறப்புடன் பேச்சாற்றலைப் பெற்று ……

1) இறைவனைப் போற்றிப் புகழ்ந்தார்.

2) இறைவனுக்கு நன்றி கூறினார்.

3) இறைவனை அப்பா! தந்தையே! என்று அழைத்தார்.

4) முழந்தாள் படியிட்டு வணங்கினார்.

பகுதி - II

முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01) 1. ஐந்நூலில் உள்ள நூல்களில் இரண்டினை எழுதுக.

2. திருவிவிலியத்தின் இருபெரும் பிரிவுகளும் எவை?

3. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினரின் இரு வகையையும் தருக.

4. ஆண்டவராகிய கடவுள் ஏதேன் தோட்டத்தை உருவாக்கி அங்கே குடியமரச் செய்த நபர்கள் இருவரைத் தருக.

5. நாம் தவறு செய்யும் போது எம்மை நல்வழிப்படுத்துபவர்கள் இருவரைத் தருக.

6. இஸ்ரேல் மக்களை ஒரு அரசின் கீழ் இணைத்த அரசர்களில் இருவரைத் தருக.

7. தலையாய பாவங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

8. தூய வாழ்வுக்கு முன்மாதிரியாக வாழ்ந்தவர்கள் இருவரைத் தருக.

9. இறைவனிடம் அருள் மிகப்பெற்றவர்கள் மகிழ்ச்சியினால் புகழ்ந்து பாடிய பாடல்கள் இரண்டு தருக.

10. கிறிஸ்தவ செப மரபில் காணப்படும் செபத்தின் வகைகள் 2 தருக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

02) 1. திருத்தூதர் பணி நூலில் எந்த இரு திருத்தூதர்களின் பணிகள் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

2. புதிய ஏற்பாட்டின் வகைகள் மூன்றையும் எழுதுக.

3. திருவிவிலியம் ஒரு புனித நூல் என அழைக்கப்படக் காரணங்கள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

LMDMUnit

03) 1. ஒத்தமை நற்செய்தி நூல்கள் இரண்டு தருக.
2. காயீன், ஆபேல் கதை மூலம் உமது வாழ்க்கைக்கு கற்றுக் கொள்ளக் கூடிய படிப்பினைகள் மூன்று தருக.
3. தூய மாற்கு நற்செய்தியாளர் பற்றி 5 வாக்கியங்கள் எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04) 1. கன்ம பாவத்தின் இரு வகைகளையும் குறிப்பிடுக.
2. சாவான பாவத்திற்குரிய காரணங்கள் மூன்று தருக.
3. உமது நண்பர் ஒருவர் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற நீர் செய்யக் கூடிய செயல்கள் ஐந்து எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05) 1. நீதித் தலைவர்கள் இருவரின் பெயரைத் தருக.
2. நீதித் தலைவர்களின் பணிகள் மூன்று தருக.
3. நீதித் தலைவர்களின் வாழ்விலிருந்து மாணவராகிய நீங்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிகாட்டல்கள் 5 எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

06) 1. "அசிப்பா" என்பதன் வரைவிலக்கணம் யாது?
2. அசிப்பா ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் 3 தருக.
3. அசிப்பாவின் படிமுறைகளை தந்து விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
1. ஒப்புரவு அருளடையாளத்தின் அவசியம்
2. யோவான் நற்செய்தி
3. சாமுவேல்
4. தூய மரிய கொறற்றி

LMDMUnit